162 **மொழிவழி மாகாணம்:** எதிரும் புதிருமானவர்கள் நடைமுறையில் ஒரே முடிவுக்கு வருகின்றனர். *. ஒரே மொழி பேசும் ஒரே கலாச்சாரமும் உடைய நெருங்கிய பொருளாதாரத் தொடர்புடன் தொடர்ந்த நிலப்பரப்பில் வாழும் மக்கள் ஒரு தேசிய இனமாக இன்று உருவாகியுள்ளனர். தெலுங்கர், தமிழர், வங்காளியர் என இன்றைய காலகட்டத்தில் பல தேசிய இனங்களாக உருவாகியுள்ளனர். முதலாளித்துவ உறவுமுறைகள் வளர்ந்துள்ள இன்றைய கட்டத்தின் வளர்ச்சி இது. பின்னர், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சுரண்டலுக்கு உட்பட்ட இந்தியாவில் போக்குவரத்து சாதனங்களும், முதலாளித்துவ உற்பத்திமுறைகளும், தொழில் பாகுபாடுகளும், வியாபாரமும் வளரும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அடக்கி ஆளவும் சுரண்டிக் கொழுக்கவும் புகுத்தப்பட்ட சாதனங்கள் பிரிந்துகிடந்த ஒவ்வொரு தேசிய இனமக்கள் ஒன்றுபடவும் உதவின. இத்துடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு சுதந்திரப் போராட்டத்தின் வாலிபர்களும் தொழிலாளரும் பொதுமக்களும் பங்குகொள்ள வந்தபின் தேசிய இன எழுச்சி மேலோங்குகிறது. தமிழர், ஆந்திரர் கன்னடியர் என்ற ஒற்றுமை உணர்ச்சியும் தாங்களும் விடுதலை அடையவேண்டும் என்ற உணர்ச்சியும் வளர்ந்தோங்குகிறது.

பார்வர்டு பிளாக்: பிரஜா சோஷலிஸ்ட்டுகளின் அமெரிக்க ஆதரவுப் போக்கையும், பூமிதான போக்கையும் கண்டனஞ் செய்யப்பட்டது. வெறுக்கப்பட்ட காங்கிரஸுக்கு இரண்டாவது அணியாக பிரஜா சோஷலிஸ்ட் கட்சி விளங்குகிறது என்று எடுத்துக் காட்டப்பட்டது. ஜெ.பி., யு.செ, லோகியா சோஷலிஸ்ட்கள் கொண்டுள்ள உறவை மறைக்கவே இன்றும் [illegible] பேசுகிறது. ([illegible]) இதை எதிர்ப்பு [illegible] செய்யப்பட்டது. இந்.க.க.வும் பார்வர்டு பிளாக்கிற்கும் உள்ள வித்தியாசமும் இ.க.க. மக்கள் ஜனநாயகம் அமைக்கப் போராடுகிறதென்றும், ஆனால் பார்வர்டு பிளாக் இந்தியாவில் உள்ள நிலைமையில் சோஷலிசப் புரட்சி சாத்தியமென்று கருதுவதாக தீர்மானம் கூறுகிறது. இதன் [illegible] தலைமை வகித்தார்.

கைத்தறி பாவுக்கு: பட்டினி கிடக்கும் நெசவாளர்களுக்கு இனிசர் 7 அவுன்ஸ் வாரத்திற்கு இரண்டு போயும் கொடுக்கவேண்டும். வேலை உத்தரவாதம் [illegible] கூட்டுறவு [illegible] சர்க்காரே [illegible] சங்கங்கள் திறந்து [illegible] உத்தரவாதம் செய்ய வேண்டும்.

அமெரிக்க பட்ஜெட்: 1953-54 வருட பட்ஜெட்டில் யுத்தத்திற்காகவும், அதைச் சார்ந்த செலவுகளுக்குமாக மொத்தம் 83 சதவிகிதம் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம், சமூக சேவைகளுக்கும், இதர சர்க்கார் சேவைகளுக்கும் 17 சதவிகிதங்கள் தான். அ. [illegible] 8.3 டாலர் [illegible] 1939ல் யுத்தத்திற்காக செலவழிக்கப்பட்டது. இது 1951-52ல் 396 டாலர்களாகவும் [illegible] 1952-53ல் 500 டாலராக வளர்ந்தது. இவ்வருட பட்ஜெட்டில் இது மேலும் அதிகரித்துள்ளது. இரண்டாம் உலகப் போருக்கு முன்பு செலவழித்ததைக் காட்டிலும் இன்று அமெரிக்காவால் [illegible] சுமார் 65 மடங்கு அதிகமாக யுத்தத்திற்காகச் செலவழிக்கப்படுகிறது. பிரி- அ. மோதல்: யுத்தத்திற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் தாய்லாந்தின் அ. சாமான்களின் இறக்குமதி 1948ல் 12 மடங்காகவும், 1949ல் 27 மடங்காகவும் பெருகியது. தாய்லாந்தின் பொருளாதாரத்திலிருந்து பிரி. பரிபூரணமாக வெளியேற்றப்பட்டாகிவிட்டது. இந்தியாவில் 1951ம் வருடம் அ. சாமான் ஏற்றுமதி ரூ 201. கோடியே 60 லட்சம். இங்கிலாந்து [illegible] பி. ஏற்றுமதி 143 கோடியே 20 லட்சம். பாகிஸ்தானுக்கு இந்திய சாமான்கள் ஏற்றுமதி 1938ல் 30.6 சதவிகிதமாக இருந்தது 1951ல் 18.4 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. இதே காலகட்டத்தில் அமெரிக்காவுக்கு இந்திய ஏற்றுமதி 7.3 சதவிகிதத்திலிருந்து 23.6 சதவிகிதமாக பெருகியுள்ளது. இதுவரை, தெ. கி. ஆசிய மார்க்கெட்டிலிருந்து பிரிட்டனை பூரணமாக வெளியேற்ற ஜப்பானை அமெரிக்கா தன் கைக்கருவியாகப் பயன்படுத்துகிறது. இந்தோனேஷியாவிலும் பிரி. நிலைமை பாதித்துள்ளது. அங்கு தோண்டி எடுக்கப்படும் தகரத்தில் 40 சதவிகிதமும் அ.வுக்கு 1950ல் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1951ல் அ. [illegible] ஏற்றுமதி செய்ய இந்தோனேஷியா ஒப்பந்தம் செய்துகொண்டது. பிரி. [illegible] ஏற்றுமதியை தடை செய்வதற்கென்றே அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தை செய்துகொண்டது.